

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2023) தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 2022 - 2023 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள 2 இலட்சம் ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 20 திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ள வரைவோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.7.2023) முகாம் அலுவலகத்தில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் மகன்கள் மதன் கார்க்கி மற்றும் கபிலன் வைரமுத்து ஆகியோர் சந்தித்து, 13.7.2023 அன்று நடைபெறவுள்ள கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.

### விவசாயிகளுக்கு உதவ, கொள்முதல் உச்சவரம்பை 40 சதவீதமாக உயர்த்த வேண்டும்!

# தமிழ்நாட்டில் கொப்பரை கொள்முதலை 90,000 மெட்ரிக் டன்னாக உயர்த்துவீர்!

## பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜூலை 12 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தென்னை விவசாயிகளின் நலன் கருதி, நடப்புப் பருவத்தில் கொப்பரைக் கொள்முதல் செய்வதற்கான உச்சவரம்பை 20 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தவும், தமிழ்நாட்டிற்கான கொள்முதல் இலக்கை 90,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (10.7.2023) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் கொப்பரைக் கொள்முதல் தொடர்பான ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமரின் கவனத்தை ஈர்க்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசின் ஆதரவு விலை திட்டத்தின்கீழ், கொப்பரை கொள்முதல் செய்யும் இலக்கை அதிகரிக்க மாநிலம் முழுவதும் உள்ள தென்னை விவசாயிகளிடமிருந்து எண்ணற்ற கோரிக்கைகள் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசின் ஆதரவு விலை திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்யவும், சந்தை விலையை நிலைப்படுத்தவும், உளுந்து, பாசிப்பயறு மற்றும் கொப்பரை போன்ற பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன என்றும், தமிழ்நாட்டில், இந்தக் கொள்முதல் ஒன்றிய அரசின் அமைப்பான, தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் லிமிடெட் (National Agricultural Cooperative Marketing Federation of India Ltd.) மூலம் செய்யப்படுகிறது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 4.46 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 53,518 இலட்சம் எண்ணெய் வித்துக்களும், ஒரு ஹெக்டேருக்கு 11,692 எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டு, பரப்பளவிலும், உற்பத்தியிலும் தமிழ்நாடு மூன்றாவது இடத்திலும், தென்னை உற்பத்தியில் தேசிய அளவில் இரண்டாவது இடத்திலும் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் 2019 ஆம் ஆண்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கொப்பரை கொள்முதல் தொடங்கப்பட்டாலும், சந்தை விலை குறைந்தபட்ச ஆதரவு விலையை விட அதிகமாக இருந்ததால், தொடக்க காலங்களில் கொள்முதல் குறைவாகவே இருந்தது என்றும், 2022 முதல், தேங்காய் உற்பத்தி அதிகரித்ததால் இந்த நிலை முழுவதுமாக மாறியது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் விளைவாக, தேங்காய் சந்தை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500லிருந்து ரூ.1,500ஆகவும், கொப்பரையின் சந்தை விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.11,500லிருந்து ரூ.8,100 ஆகக் குறைந்ததனால், 2022 மற்றும் நடப்பாண்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் கொப்பரை கொள்முதல் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆதரவு விலை திட்டத்தின்கீழ், நடப்பாண்டில், 2023 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாத காலத்திற்குள், 56,000 மெட்ரிக் டன் என்ற இலக்கில் 47,513 மெட்ரிக் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளிடம் இன்னும் கொப்பரை கையிருப்பு அதிகமாக இருப்பதாலும், சந்தை விலை தொடர்ந்து குறைவாக இருப்பதாலும், ஆதரவு விலைத் திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கொப்பரையின் அளவை அதிகரிக்குமாறு மாநிலம் முழுவதும் உள்ள தென்னை விவசாயி களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, நடப்பு பருவத்தில் செப்டம்பர் 2023 வரை கொப்பரை கொள்முதல் செய்வதற்கான உச்சவரம்பை, தற்போதுள்ள 25 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தவும், தமிழகத்திற்கான கொள்முதல் இலக்கை 56,000 மெட்ரிக் டன்னில் இருந்து 90,000 மெட்ரிக் டன்னாக உயர்த்தவும், தொடர்புடைய அமைச்சகத்திற்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இது கொப்பரையின் சந்தை விலையை நிலைப்படுத்த உதவுவதோடு, மாநிலத்தில் உள்ள தென்னை விவசாயிகளுக்கும் நல்ல பயனளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (10.7.2023) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் சந்தித்து, அமெரிக்க நாட்டு பயணத்தின் போது தமிழ்நாட்டின் கிராம பகுதிகளைச் சேர்ந்த மாணவச் செல்வங்களுக்கு அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த புரிதலும் சென்றடைய TEALS (Technical Education And Learning Support) திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் Microsoft நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பள்ளிக்கல்வி இயக்குநர் ஜி. அறிவொளி ஆகியோர் உள்ளனர்.

### திருவள்ளூர் மாவட்டம் பெரும்பாக்கத்தில் ரூ.2.40 கோடியில் கட்டப்பட்ட

# ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 12 - ரூ.2.40 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2023) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், பெரும்பாக்கம் கிராமத்தில் 2 கோடியே 40 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையானது தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவதன் வாயிலாகவும், பல்வேறு சமூகப் பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாகவும் பரந்த மற்றும் பன்முகத்தன்மையுடைய அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாரா உழைக்கும் வகுப்பினரின் நலனை மேம்படுத்தும் நோக்கில் பணியாற்றி வருகிறது. மேலும், தொழிலாளர்களை பாதுகாத்தல், நியாயமான, பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடத்தை உறுதி செய்வதன் வாயிலாக உற்பத்தியை பெருக்குதல், தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை உறுதி செய்தல், துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், பெரும்பாக்கம் கிராமத்தில் 50 சென்ட் நிலப்பரப்பில், 10,600 சதுர அடி கட்டடப் பரப்பில் தரை மற்றும் முதல் தளத்துடன், 2 கோடியே 40 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகம் முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வளாகத்தில், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்), தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகங்கள் மற்றும் அதன் சார்நிலை அலுவலகங்களான தொழிலாளர் துணை ஆய்வாளர், தொழிலாளர் உதவி ஆய்வாளர், முத்திரை ஆய்வாளர் அலுவலகங்கள் ஆகியவை அமையப் பெற்றுள்ளன.

இதன்மூலம், பொதுமக்கள், தொழி லாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் தங்களுடைய கோரிக்கைகள் மற்றும் விண்ணப்பங்களை அளிக்கவும்,

18 உடலுழைப்பு தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் தங்களுடைய பதிவை புதுப்பிக்கவும், புதிதாக பதிவு செய்யவும், பணப் பயன்களைப் பெறவும் ஏதுவாக இருக்கும்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், முகமது நசிமுத்தின், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர். அதுல் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட

# தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ்,எம்.எல்.ஏ அறிவிப்பு!



*கிருஷ்ணகிரி, ஜூலை 12- கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாநில இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (13.07.2023 - புதன் கிழமை) மாலை 3.00 மணியளவில் ஒசூர் - தளி சாலையில் உள்ள ஆனந்த் கிரேண்ட் பேலஸில் நடைபெறஉள்ளது.*

*இதில் மாவட்டப் பொறுப்பு அமைச்சர் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.*

*இக்கூட்டம் மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ்,எம்.எல்.ஏ தலைமையிலும்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மாவட்ட துணைச் செயலாளர் பி.முருகன், மாநகரச் செயலாளரும் மேயருமான எஸ்.ஏ. சத்யா வரவேற்புரை ஆற்றுகிறார்.*

*இக்கூட்டம் மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழுஉறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர், பகுதிச் செயலாளர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.*

*எனவே மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர், ஒன்றியக் குழு தலைவர்கள், ஒன்றிய துணைத் தலைவர், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதி நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கவுன்சிலர்கள், இன்னாள், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள்,பொது உறுப்பினர்கள் உள்பட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.*



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 08.07.2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்பு திட்டத்தின்கீழ் 100 சதவிகித மானியத்தில் உரங்களை விவசாயத் பெருமக்களுக்கு வழங்கும் முன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் இரா.வைத்திநாதன். சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன் (இலால்குடி),.பி.அப்துல் சமது (மணப்பாறை), மாவட்ட வருவாய் திருமதி.இரா.அபிராமி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### ஆரூர் தமிழ்நாடனுக்கு கவிஞர்கள் திருநாள் விருது!

# கவிப்பேரரசு வைரமுத்து பிறந்தநாள் விழா!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. - கம்பம் பெ.செல்வேந்திரன் வாழ்த்துரை!

*சென்னை, ஜூலை 12 - கவிப்பேரரசு வைரமுத்துவின் பிறந்தநாளை வெற்றித் தமிழர் பேரவை ஆண்டு தோறும் கவிஞர்கள் திருநாளாகக் கொண்டாடி வருகிறது.*

*இந்த ஆண்டு கவிப்பேரரசு வைரமுத்துவின் பிறந்த நாள் ஜூலை 13 வியாழக் கிழமை காலை 9 மணிக்குச் சென்னை கோடம்பாக்கம் டிரஸ்ட்புரத்தில் உள்ள பொன்மணி மாளிகை திருமண மண்டபத்தில் கொண்டாடப்படுகிறது. ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஜெகத்ரட்சகன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கம்பம் பெ. செல்வேந்திரன் இருவரும் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.*

*வெற்றித் தமிழர் பேரவை ஒவ்வோராண்டும் கவிப்பேரரசு வைரமுத்துவின் பிறந்தநாளை முன்னிட்டு ஒரு கவிஞரைத் தேர்வு செய்து ‘கவிஞர்கள் திருநாள் விருது’ வழங்கி வருகிறது. இந்த ஆண்டு கவிஞர்கள் திருநாள் விருது பெறுகிறார் கவிஞர் ஆரூர் தமிழ்நாடன்.*

*அவருக்குக் கவிப்பேரரசு வைரமுத்து விருது வழங்குகிறார். கவிஞர் வைரமுத்து கல்வி அறக்கட்டளை வழங்கும் இந்த விருது ரூ.25,000 ரொக்கம், பாராட்டுப் பட்டயம் மற்றும் சால்வை கொண்டதாகும்.*

*இதுவரை கவிஞர்கள் திருநாள் விருதினை சுரதா, சிற்பி பாலசுப்பிரமணியன், ஈரோடு தமிழன்பன், நா.காமராசன், வா.மு. சேதுராமன், கே.சி.எஸ். அருணாசலம், முகவை ராஜமாணிக்கம், முத்துலிங்கம், பூவை செங்குட்டுவன், காசிஆனந்தன், இன்குலாப், இந்திரன், கல்யாண்ஜி, விக்கிரமாதித்யன், தமிழச்சிதங்கபாண்டியன், கலாப்ரியா, மனுஷ்ய புத்திரன், ஆண்டாள்பிரியதர்சினி, இளையபாரதி, சல்மா, அ.வெண்ணிலா, இளம்பிறை, தாராகணேசன், சக்தி ஜோதி உள்ளிட்ட பல கவிஞர்கள் பெற்றிருக்கிறார்கள்.*

*விழாவின் தொடக்கமாக ஆலாப் ராஜூ வர்ஷா இசைக் குழுவினர் கவிப்பேரரசு வைரமுத்துவின் தமிழிசைப் பாடல்களைப் பாடுகிறார்கள்.*

*விழா ஏற்பாடுகளை சென்னை மாவட்ட வெற்றித் தமிழர் பேரவையின் சார்பில் வி.பி.குமார், வெங்கடேஷ், தமிழரசு, காதர் மைதீன், செல்லத்துரை, சண்முகம், ராஜசேகர், நாசர், மாந்துறைஜெயராமன், தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோர் செய்து வருகிறார்கள்.*